ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2494/17 - 2026 ජූනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.25

*2494/17 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

**161 அலகுகளைக் கொண்ட உத்தேச குடியிருப்பு அடுக்குமாடிக் கட்டடம் மற்றும் 06 குடியிருப்பு வில்லாக்களைக் கொண்ட செயற்றிட்டம்**
**இல. 414/1, தொடந்துவ வீதி, கிராவேகொட, ஹிக்கடுவ**

**சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இல. 18-01, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், ஈச்சலன் சதுக்கம். கொழும்பு 01 என்ற முகவரியைக் கொண்ட மிரேகா சீ ஸ்கேப் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட, ஹிக்கடுவ, கிராவேகொட,தொடந்துவ வீதி, இல. 414/1 என்ற இடத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 162 அலகுகளைக் கொண்ட குடியிருப்பு அடுக்குமாடிக் கட்டடம் மற்றும் 06 குடியிருப்பு விலாக்களைக் கொண்ட செயற்றிட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, பொதுமக்களின் பார்வைக்காக பின்வரும் இடங்களில் 2026.06.25 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர) தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை வைக்கப்பட்டுள்ளது,

இதற்கு மேலதிகமாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk ஊடாக இவ்வறிக்கை மூன்று மொழிகளிலும் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.

1A - G 47107 — 23 (2026/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

3. மாவட்டச் செயலகம், காலி.

4. பிரதேச செயலகம், ஹிக்கடுவ.

5. நகர சபை, ஹிக்கடுவ.

6. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம். காலி.

7. மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாவட்ட அலுவலகம், காலி.

8. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச அலுவலகம். காலி

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடல் மீது ஏற்படும் தாக்கங்கள் குறித்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை 2026.06.25 ஆந் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்றேன்.

**பேராசிரியர் பீ. பி. டர்னி பிரதீப் குமார,**
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கம் : 011-2449754, 011-2387922, 011-2449197
பெக்ஸ் இலக்கம் : 011-2438005, 011-2472623
ஈ-மெயில் : dg.ccd.lk@gmail.com

EOG 06 - 0282